கல்வி பயில்வதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இம்மையங்களில் கோடைக் காலத்தில் வெப்பத்தினாலும், மழை மற்றும் குளிர் காலங்களில் போதிய வெளிச்சமின்மையாலும், குழந்தைகள் அவதியுறாமல் இருக்கும் வகையில், மின் விசிறி மற்றும் மின் விளக்கு வசதி ஏற்படுத்தித் தர எனது அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்படி, மின் வசதியில்லாத 45,345 குழந்தைகள் மையங்களில், 27 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில், உட்புற மின் கட்டமைப்பு வசதி ஏற்படுத்தப்படுவதுடன் (மேசையைத் தட்டும் ஒலி) மின்விசிறி மற்றும் மின் விளக்கு ஆகியவை பொருத்தப்படும்.

சுற்றுச்சூழல் மாசு காரணமாக, குழந்தைகளுக்கு நோய் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில், சுற்றுப்புறச் சுகாதாரத்தைப் பேணவும், குழந்தைகளிடம் இளம் வயதிலேயே கழிப்பறையைப் பயன்படுத்தும் பழக்கத்தை ஊக்குவிக்கவும், குழந்தைகள் மையங்களில் குழந்தைகள் நேயக் கழிப்பிடங்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இக்கழிப்பிடங்கள் குழந்தைகள் பயன்படுத்துவதற்கு ஏதுவான வகையில் வடிவமைக்கப்படும். இதற்காக இந்த ஆண்டு 23 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவில் 29,727 குழந்தைகள் மையங்களில் குழந்தைகள் நேயக் கழிப்பிடங்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–00

சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின்கீழ் இயங்கும், சத்துணவு மையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் 28,596 பணியிடங்கள் காலியாக உள்ளன. இந்தக் காலிப் பணியிடங்கள் அனைத்தும் விரைவில் நிரப்பப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாறு எனது அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளாலும், செயல்படுத்தி வரும் திட்டங்களாலும் தாய்–சேய் நலம் காப்பதில் தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) திரு. சிங்காரவேலர், திரு. ஜீவரத்தினம் ஆகியோருக்கு மணிமண்டபம் மற்றும் திரு. சிதம்பரநாதன் அவர்களுக்கு சிலை அமைத்தல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய

2011 செப்டம்பர் 12] [செல்வி ஜெ ஜெயலலிதா]

தியாகிகளையும்; சமுதாய மேம்பாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களையும் போற்றிப் பெருமைப்படுத்த வேண்டியதும்; அவர்களது பெருமைகளை எதிர்கால தலைமுறையினர் அறிந்து பின்பற்றும் வகையில் நினைவுச் சின்னங்களை எழுப்பி மரியாதை செய்ய வேண்டியதும் ஒரு நல்ல அரசின் கடமையாகும்.

தமிழ் சமுதாயத்திற்கு வாழ்வளிக்க தங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்த பெருமக்களுக்குப் பெருமைச் சேர்ப்பதில் எனது அரசு மிகுந்த முன்னுரிமை கொடுத்து செயல்படுகிறது.

சிந்தனைச் சிற்பி என்று மக்களால் போற்றப்படும் திரு. சிங்காரவேலர் அவர்கள், மயிலாப்பூர் மீனவர் கிராமத்தில் 18–2–1860 இல் பிறந்து, கல்வி பல கற்று சிறந்த வழக்குரைஞராகத் திகழ்ந்தவர். அந்நியருக்கு எதிராக அண்ணல் காந்தியடிகள் ஒத்துழையாமை போராட்டத்தைத் தொடங்கியபோது, தனது வழக்குரைஞர் அங்கியைத் தீயிட்டுக் கொளுத்திவிட்டு தீவிரமான விடுதலைப் போராட்ட வீரராக மாறியவர். கான்பூரில் நடைபெற்ற பொதுவுடைமைக் கட்சியின் முதல் மாநாட்டிற்குத் தலைமையேற்று, தன்னைப் பெற்றெடுத்த தமிழகத்துக்கும், தான் பிறந்த மீனவ இனத்திற்கும் தனிப் பெருமை சேர்த்தவர். சிந்தனையாலும், செயலாலும், அல்லும் பகலும் ஏழைத் தொழிலாளர் வர்க்கத்திற்குப் பாடுபட்ட உழைப்பாளர், சிந்தனைச் சிற்பி திரு. சிங்காரவேலர் அவர்கள்.

சுயமரியாதைச் சுடரொளி திரு. ஜீவரத்தினம் அவர்கள், 11–11–1911 இல் ஏழை மீனவர் குடும்பத்தில் பிறந்து, தமிழையும், ஆங்கிலத்தையும் சிறப்பாகக் கற்று, சொற்பொழிவு ஆற்றுவதில் வல்லவராகத் திகழ்ந்தவர். திராவிட இயக்கத்தின் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்த திரு. ஜீவரத்தினம், தமிழர் நலனிலும், மீனவர் நலனிலும் மிகுந்த அக்கறை கொண்டு சமுதாய மாற்றத்தைக் காண கடுமையாக உழைத்தவர். பேரறிஞர் அண்ணாவின் அன்பையும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நம்பிக்கையையும் பெற்றுத் திகழ்ந்தவர். பழமையை விடுத்து புதுமையை ஏற்று சமுதாய மாற்றத்தைக் காண உழைத்தவர்.

ஏழைத் தொழிலாளர்களுக்காகப் பாடுபட்ட ஓய்வறியா தொண்டரும், சிந்தனைச் சிற்பியுமான திரு. சிங்காரவேலர் அவர்களுக்கும்; திராவிட இயக்கத்தின் வளர்ச்சிக்கு அரும் பாடுபட்ட ஆற்றல்மிகு பேச்சாளராகவும், மீனவ இனத்தின் தலைவராகவும் விளங்கிய சுயமரியாதைச் சுடரொளி

திரு. ஜீவரத்தினம் அவர்களுக்கும்; அவர்தம் நினைவைப் போற்றி மணிமண்டபங்கள் அமைக்க வேண்டுமென பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கோரிக்கைகளை மிகுந்த உவகையுடன் ஏற்று, தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கும் தலைவர்களான சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்களுக்கும்; சுயமரியாதைச் சுடரொளி திரு. ஜீவரத்தினம் அவர்களுக்கும்; சென்னை, பட்டினப்பாக்கத்தில் மணிமண்டபங்கள் கட்ட எனது அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ் மொழியின்மீது தணியாத பற்று கொண்டு, பல தலைவர்கள் தமிழ்நாட்டிற்காகத் தியாகங்கள் பல செய்துள்ளனர். அதில் குமரி மாவட்டத்தை தமிழ்நாட்டோடு இணைத்திட போராட்டம் நடத்திய மொழிப்போர் தியாகி திரு. சிதம்பரநாதன் அவர்கள் முக்கியமானவர் ஆவார்.

தியாகி திரு. சிதம்பரநாதன் அவர்கள், 5–1–1948 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில், திருவிதாங்கூர்–கொச்சி சட்டமன்ற உறுப்பினர் ஆனார். திருவிதாங்கூர்–கொச்சி அரசில் வனம் மற்றும் வருவாய்த் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்த திரு. சிதம்பரநாதன், திருவிதாங்கூர்–கொச்சி அரசில் அமைச்சர் பொறுப்பு வகித்த ஒரே தமிழர் ஆவார். அக்காலத்தில் திருவிதாங்கூர் தமிழ் மக்கள் மேல் விதிக்கப்பட்டிருந்த மானிய வரியை இவர் நீக்கினார்.

தாய்த் தமிழகத்துடன் தமிழ்ப் பகுதிகளை இணைப்பது ஒன்றே திருவிதாங்கூர் தமிழர்களின் சிக்கல்களுக்கு ஒரே தீர்வு என்ற நிலையில், தன் அமைச்சர் பதவியைத் துச்சமெனத் துறந்தார்.

தாய்த் தமிழகத்துடன் தமிழ்ப் பகுதிகளை இணைக்கக் கோரி 4–7–1954 இல் கண்டன நாளாக அறிவிக்கப்பட்டு, பொதுமக்களைச் சந்திக்க மூணாறு சென்றபோது, திரு. சிதம்பரநாதன் அவர்கள் கைது செய்யப்பட்டு 6–7–1954 இல் திருவனந்தபுரம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டு பல இன்னல்களுக்கு ஆளானார்.

முற்பகல் 11–05

திரு. சிதம்பரநாதன் அவர்கள், 1956 முதல் 1969 வரை தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தார். பல தியாகங்களைச் செய்த மொழிப் போர் தியாகி திரு. சிதம்பரநாதன் அவர்களுக்கு கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளையில் திருவுருவச் சிலை

2011 செப்டம்பர் 12][செல்வி ஜெ ஜெயலலிதா]

அமைக்கப்படும் என கன்னியாகுமரி மாவட்ட மக்களிடம் தேர்தல் வாக்குறுதி அளித்திருந்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வாக்குறுதியினை நிறைவேற்றும் வகையில், மொழிப் போர் தியாகி திரு. சிதம்பரநாதன் அவர்களின் திருவுருவச் சிலையை, கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளையில் அமைக்க எனது அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

8. விதி 110—ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அளித்த அறிக்கைகளுக்கு நன்றி தெரிவித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்திற்கு உழைத்த சான்றோர்களுக்குப் பெருமை சேர்ப்பதிலும், அந்தப் பெருமை நிலைத்து நிற்கிற வகையிலே மணி மண்டபங்கள் அமைத்து, திருவுருவச் சிலைகள் அமைத்து, புகழ் சேர்ப்பதிலும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஈடு இணையாக வேறு எந்த அரசியல் தலைவரும் விளங்கிட முடியாது என்கிற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலே பல்வேறு சான்றோர்களுக்கு நினைவு மண்டபங்களையும், திருவுருவச் சிலைகளையும் அமைத்தவர்கள், பெருமைபடுத்தியவர்கள் நம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அந்த வரிசையிலே இன்றைக்கு 110 விதியின்கீழ் இரண்டு முக்கிய அறிவிப்புகளை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். ஒன்று, அங்கன்வாடிகளை, சத்துணவுக் கூடங்களை மேம்படுத்துகிற வகையிலே 120 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகையை ஒதுக்கி, ஒரு தேசத்தினுடைய எதிர்காலத்திற்கும், வளர்ச்சிக்கும், அந்த தேசத்தின் பொருளாதார வளர்ச்சியை மட்டும் அளவுகோலாகக் கொள்ள முடியாது. அந்த தேசத்தினுடைய குழந்தைகள் ஆரோக்கியமாகப் பிறப்பதிலும், அவற்றை ஆரோக்கியமாக வளர்ப்பதிலும் அக்கறை காட்டுவதன்மூலம்தான் அதை நிலைநிறுத்த முடியும் என்கிற வகையிலே ஆரோக்கியமான குழந்தைகள் பிறப்பதற்கும், ஆரோக்கியமான குழந்தைகள் இந்த நாட்டிலே வளர்வதற்கும் அடித்தளமாக இன்றைக்கு அதை மேம்படுத்தியிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், தமிழகத்தின் முதல் பொதுவுடைமை சித்தாந்தவாதி சிங்காரவேலர் அவர்களுக்கும்,*